செ.வெ.எண்.085 நாள்: 13.03.2018

**மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள வணிக நிறுவனங்களுக்கு D & O உரிமம் புதுப்பித்தலுக்கான கட்டணம் செலுத்த மார்ச் 31 வரை கால நீட்டிப்பு ஆணையாளர் மரு.அனீஷ் சேகர், இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் **D&O (**Trade) உரிமம் மாநகராட்சியின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த உரிமம் புதுப்பித்தலுக்கான காலம் ஏற்கனவே மார்ச் 10 தேதி வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது உரிமம் புதுப்பிப்பதற்கு வசதியாக வருகின்ற 31 மார்ச் 2018 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த காலநீட்டிப்பை பயன்படுத்தி நான்கு மண்டல அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி மைய அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அனைத்து நாட்களிலும் கட்டணத்தை நேரடியாக செலுத்தி அதற்குண்டான இரசீதுடன் புதுப்பித்தல் படிவத்தை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வார்டு சுகாதார ஆய்வாளரிடம் ஒப்படைத்து தங்களுடைய உரிமத்தை புதுப்பித்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் தொழில்வரி, சொத்து வரி, திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டு கட்டணம் ஆகியவற்றை நிலுவையின்றி செலுத்தினால் மட்டும்தான் உரிமம் புதுப்பிக்கப்படும். அவ்வாறு புதுப்பிக்கப்படாத வணிக நிறுவனங்கள் மீது மதுரை மாநகராட்சியின் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரை மாநகராட்சி அனைத்து வரி வசூல் மையங்களில் உள்ள கணிப்பொறியின் புதிய மென்பொருளில் ஏற்பட்ட பழுதுகள் சரிசெய்யப் பட்டுள்ளது. எனவே மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொது மக்கள் தாங்கள் செலுத்த வேண்டிய 2017-18 ஆம் நிதியாண்டுக்கான சொத்து வரி, குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை பராமரிப்பு கட்டணம் ஆகிய வரி வருவாய் இனங்களை எதிர்வரும் 31.03.2018 க்குள் செலுத்தி, மாநகராட்சியில் பல்வேறு அடிப்படை வசதிகளும், பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளும் மேற்கொள்வதற்கு முழு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பொதுமக்கள் வரி செலுத்துவது தொடர்பாக ஏதேனும் புகார் தெரிவிக்க விரும்பினால் ஆணையாளர் அவர்களிடம் நேரிலோ் மாநகராட்சியின் வாட்ஸ்அப் எண்.7449104104 என்ற எண்ணிலும் தெரிவிக்கலாம். மேலும் பொதுமக்கள் தங்களது வரிகள் குறித்த கட்டண தொகையினை அறிந்து கொள்ளுவதற்கு மாநகராட்சியின் உதவி மையம் தொலைபேசி எண்.0452 – 2525252 என்ற எண்ணில் தங்களது வரி விதிப்பு எண்ணை தெரிவித்து கட்டணத்தை அறிந்து கொள்ளலாம் என ஆணையாளர் மரு.அனீஷ் சேகர், இ.ஆ.ப. அவர்களால் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

வெளியீடு: செ.ம.தொ.அ
மதுரை மாநகராட்சி